## ‘கச்சத்தீவைத் திரும்பப் பெறுதல்’ குறித்து – சட்டப்பேரவையில் ‘அரசினர் தனித் தீர்மானம்!

# ‘ஆதரித்த அத்தனை பேருக்கும் தமிழ்நாட்டு மக்கள் - மீனவர்கள் சார்பில் என் இதயப்பூர்வமான நன்றி!’

## சட்டப்பேரவையில் - முதல்வர் மு.க.ஸ்டாலின் உரை!

**சென்னை, ஏப். 4 -**

**‘கச்சத் தீர்வை திரும்பப் பெறுதல்’ குறித்து சட்டப்பேரவையில் நேற்று முன்தினம் தாம் முன்மொழிந்த ‘அரசினர் தனித் தீர்மானத்தை’ வரவேற்றும் - ஆதரித்தும் உரையாற்றிய அத்தனை பேருக்கும் தமிழ்நாட்டு மக்களின் சார்பிலும், தமிழ்நாட்டு மீனவர்கள் சார்பிலும் தமது இதயப்பூர்வமான நன்றியினைத் தமதுஉரையில்முதல்வர்மு.க.ஸ்டாலின் தெரி வித்துக் கொண்டார்.**

இதுகுறித்து முதல்வர் அவர்களின் உரை வருமாறு:

கச்சத்தீவைத் திரும்ப பெறுதல் குறித்த இந்த அரசினர் தீர்மானத்தின்மீது பல்வேறு உறுப்பினர்கள் பேசியிருக்கிறார்கள். உறுப்பினர் தி. வேல்முருகன் , இதை வரவேற்றுப் பேசுகையில், கன்னியாகுமரி மற்றும் திருத்தணி இணைக்கப்பட்ட அதே நாளில் உரிமைப் போர் தொடங்கியிருப்பதாகக் குறிப்பிட்டு, உணர்ச்சிப் பெருக்கோடு தன்னுடைய உரிமைக் குரலை இங்கே பதிவு செய்திருக்கிறார்.

**மீனவர்கள் படக்கூடிய துன்பங்கள்!**

அதேபோன்று ஈ.ஆர். ஈஸ்வரன் இந்தப் பிரச்சினையை அரசியல்ரீதியாக பார்க்காமல், தமிழ்நாட்டு மீனவர்கள் மற்றும் படகுகள் தொடர்ந்து சிறை பிடிக்கப்பட்டு வருவதைப் பற்றிக் குறிப்பிட்டு, இந்தத் தீர்மானத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார்கள். ப. அப்துல் சமது மற்றும் மு. ஜெகன் மூர்த்தி தமிழ்நாட்டு மீனவர்கள் படக்கூடிய துன்பங்களைக் குறித்து குறிப்பிட்டு, இந்தியப் பிரதமர் இலங்கை செல்லும்போது, இதுகுறித்துப் பேசவேண்டுமென்று வலியுறுத்திக் காட்டி, தீர்மானத்தை வரவேற்றிருக்கிறார்கள்.

**பரப்பப்படும் உண்மைக்கு மாறான செய்திகள்!**

அதேபோன்று, டாக்டர் தி.சதன் திருமலைக்குமார் , வைகோ நாடாளுமன்றத்தில் இதுதொடர்பாக வலியுறுத்திப் பேசியதைக் குறிப்பிட்டு தீர்மானத்தை வரவேற்றிருக்கிறார்கள். உறுப்பினர் ட்டி. இராமச்சந்திரன் உரையாற்றுகையில், 1974 மற்றும் 1976 ஆம் ஆண்டுகளில் போடப்பட்டிருக்கக்கூடிய ஒப்பந்தங்கள் குறித்து விரிவாக உரையாற்றி, கருத்துகளைத் தெரிவித்து வரவேற்றிருக்கிறார்.

இந்திய கம்யூனிஸ்ட் கட்சியினுடைய மார்க்சிஸ்ட் கட்சி உறுப்பினர் வி.பி. நாகைமாலி உரையாற்றுகையில், நீதிமன்ற வழக்கு குறித்தும், நாம் எடுக்க வேண்டிய முடிவு குறித்தும் தனது கருத்துக்களைத் தெரிவித்திருக்கிறார்கள்.



எஸ்.எஸ். பாலாஜி உரையாற்றுகையில் தமிழ்நாடு அரசோடு கலந்தாலோசிக்காமல், நாடாளுமன்றத்தில் உரிய வகையில் ஒப்புதல் பெறாமல், 1974 ஆம் ஆண்டு போடப்பட்ட ஒப்பந்தம் குறித்து வெளியில் பரப்பப்படும் உண்மைக்கு மாறான செய்திகள் குறித்து விரிவாகப் பேசியிருக்கின்றார்.

பாரதிய ஜனதா கட்சியைச் சார்ந்த உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் உரையாற்றுகையில் மீனவர் நலன் காக்க தனி அமைச்சகம் உருவாக்கப்பட்டது போன்ற நல்ல விஷயங்களைக் குறிப்பிட்டு, அன்றைக்கு இந்த ஒப்பந்தம் குறித்து நாடாளுமன்றத்தில் விவாதம் நடைபெற்றபோது மறைந்த பாரத பிரதமர் வாஜ்பாய் கடுமையாக எதிர்த்தது பற்றிக் குறிப்பிட்டு, வரலாற்றுத் தவறு சரி செய்யப்படவேண்டுமெனக் குறிப்பிட்டார்.

எங்களால் இயலும் என்று சொல்பவர்கள் கடந்த 10 ஆண்டுகளாக அன்றைக்கு ஆட்சியில் இருந்தவர்கள் வலியுறுத்திய போதும், இப்போது கடந்த 4 ஆண்டுகளாக நாங்கள் வலியுறுத்தி வருகிறபோதும் ஒன்றிய அரசு செவிசாய்க்கவில்லை.

இன்றைக்கு இந்தத் தீர்மானம் ஒருமனதாக நிறைவேற்றப்பட்டு ஒன்றிய அரசுக்கு அனுப்பப்பட்ட பிறகாவது செய்வதற்கு நம்முடைய உறுப்பினர் அங்கிருக்கக்கூடிய தலைவரிடத்திலே வற்புறுத்துவார்கள் என்று நம்புகிறேன். அவரும் தீர்மானத்தை வரவேற்றிருக்கிறார். மகிழ்ச்சி.

அதேபோல, ஜி.கே. மணி இதை வரவேற்று உரையாற்றியிருக்கிறார். மேலும், தீர்மானத்தை நிறைவேற்றி ஒன்றிய அரசுக்கு அனுப்புவதோடு, ஒரு குழு இந்தியப் பிரதமர் அவர்களை நேரில் சந்தித்து தமிழ்நாட்டு மீனவர்கள் படும் வேதனையைப் பற்றிய விவரங்களைச் சுட்டிக் காட்டி, கச்சத்தீவை மீட்க வேண்டியதன் அவசியத்தைப் பற்றி வலியுறுத்த வேண்டுமென்று குறிப்பிட்டி ருக்கிறார். அதையும் வரவேற்றிருக்கிறார்.

கு.செல்வபெருந்தகை உரையாற்றுகையில், 1921 ஆம் ஆண்டு முதல் நடைபெற்ற நிகழ்வுகளையெல்லாம் குறிப்பிட்டு, தீர்மானத்தை வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

அதேபோல, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களும் இடையிடையிலே கொஞ்சம் முரண்பாடான சில கருத்துகளைத் தெரிவித்தாலும், அதை யெல்லாம் மறந்து, இந்தத் தீர்மானத்தை உளப்பூர்வமாக வரவேற்றுப் பேசியிருக்கிறார்.

எனவே, அத்தனைப் பேருக்கும் இந்த நேரத்தில் நான் தமிழ்நாட்டு மக்களின் சார்பில், தமிழ்நாட்டு மீனவர்களின் சார்பில் எனது இதயபூர்வமான நன்றியைத் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) நன்றி, வணக்கம்.

இவ்வாறு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் உரையாற்றினார்.

# அ.தி.மு.க. ஆட்சியில் - கச்சத் தீவை மீட்க எடுத்த நடவடிக்கை என்ன ?

## சட்டப் பேரவையில் - எதிர்க்கட்சித் தலைவருக்கு - முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் கேள்வி!

**சென்னை, ஏப். 4 -**

**அ.தி.மு.க. ஆட்சியில் கச்சத் தீவை மீட்க எடுத்த நடவடிக்கை என்ன என்று எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமிக்கு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்கள் கேள்வி எழுப்பினார்.**

**கச்சத் தீவை திரும்பப் பெற நடவடிக்கை எடுக்க ஒன்றிய அரசை வலியுறுத்தி சட்டப் பேரவையில் தாக்கல் செய்யப்பட்ட தீர்மானத்தின் மீது பேசிய எதிர்க்கட்சித் தலைவர் பழனிசாமிக்குப் பதிலளித்து பேசிய முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், மீனவர்கள் பிரச்சினை தொடர்பாக ஒன்றிய அரசுக்கு 74 கடிதங்கள் எழுதியுள்ளதைத் தெரிவித்தார்.**

**கச்சத் தீவு விவகாரத்தில் எதிர்க்கட்சித் தலைவர் எடப்பாடி பழனிசாமி தேவையில்லாத கருத்துக்களைத் தெரிவித்து வருவதாகக் குற்றஞ்சாட்டிய முதல்வர் அவர்கள், ‘அ.தி.மு.க., ஆட்சியில் இருந்த போது கச்சத் தீவு விவகாரத்தில் என்ன செய்தீர்கள்?” என்று கேள்வி எழுப்பினார்.**

**புதுடெல்லியில் உள்துறை அமைச்சர் அமித்ஷாவைச் சந்தித்துப் பேசிய போது கச்சத் தீவு விவகாரம் குறித்துப் பேசினார்களா? என்றும் முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் வினவினார்.**

இது குறித்து சட்டப்பேரவையில் நடைபெற்ற விவாதம் வருமாறு:

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** இதுவொரு முக்கியமான தீர்மானம். மீனவர்களுடைய பிரச்சினைக்கு நிரந்தரமான தீர்வுகாண வேண்டுமென்பதற்காக, விரைவிலே, பாரதப் பிரதமர் அவர்கள் வரக்கூடிய இந்தச் சூழ்நிலையிலே, இலங்கைக்குச் சென்று தமிழ்நாட்டுக்கு வரப் போகிறார்கள். ஆக, இப்படிப்பட்ட சூழ்நிலையில், இந்த அரசினர் தனித் தீர்மானத்தை முக்கியமாக நாம் நிறைவேற்றியிருக்கிறோம். இந்த அரசினர் தனித் தீர்மானத்தை ஏகமனதாக, பாரதிய ஜனதா கட்சிகூட ஆதரித்திருக்கிறது. எனவே, இதனுடைய முக்கியத்துவத்தை உணர்ந்துதான் அவர்களும் ஆதரித்திருக்கிறார்கள். எனவே, இதிலே எந்த சர்ச்சையும் வர வேண்டாம் என்று நான் உங்களையெல்லாம் கேட்டுக்கொள்கிறேன். (குறுக்கீடு)

எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், ஆளுங்கட்சியாக இருக்கக்கூடிய திராவிட முன்னேற்றக் கழகத்தைக் குறை சொல்லி, இங்கே சில செய்திகளை வேகமாக பதிவு செய்து கொண்டிருக்கிறார். ஏற்கெனவே பெயரைக் குறிப்பிட்டுச் சொன்னதற்கே, எதிர்க்கட்சியிலே அதற்கு objection சொல்லி அதை நீக்க வேண்டுமென்று சொன்னார்கள். இந்தத் தீர்மானம் முறையாக, கட்டுப்பாட்டோடு, ஒற்றுமையாக இருந்து நிறைவேற்றப்பட வேண்டும்; அந்த நிலையை நாம் அனைவரும் ஏற்படுத்த வேண்டும் என்பதற்காகத்தான் நான் அதை நீக்கச் சொன்னேனே தவிர, அது தவறா, தவறில்லையா? அது அவைக்குறிப்பில் இடம் பெறலாமா, வேண்டாமா என்றுகூட நாம் சிந்திக்கவேண்டிய அவசியம் இல்லை என்று சொன்னேன்.

ஆனால், இப்போது எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள் தேவையில்லாமல் பல பிரச்சினைகளைச் சொல்கிறார். நானும் சொல்வதற்குத் தயாராக இருக்கிறேன். எங்களைப் பார்த்துக் கேட்கிறீர்கள். நீங்களும் ஆட்சிப்பொறுப்பில் இருந்திருக்கிறீர்கள், 10 வருடம் நீங்களும் இருந்திருக்கிறீர்கள். (குறுக்கீடு) இல்லை, இல்லை. 10 வருடம் இருந்திருக்கிறீர்கள். அப்போது என்ன செய்தீர்கள்? (குறுக்கீடு) அப்போது என்ன செய்தீர்கள்? கிட்டத்தட்ட 54 கடிதங்களை நாங்கள் இதுவரையில் அனுப்பி வைத்திருக்கிறோம். பிரதமரை நேரடியாக சந்திக்கும் போதெல்லாம் இதுகுறித்துப் பேசியிருக்கிறோம். சமீபத்தில் நீங்கள் டெல்லிக்குச் சென்று வந்தீர்களே, அப்போது இதைப்பற்றிப் பேசிவிட்டு வந்தீர்களா? சொல்லியிருக்கிறீர்களா? சொல்லுங்கள். (மேசையைத் தட்டும் ஒலி) நான் கேட்கும் இந்தக் கேள்விக்கு பதில் சொல்லுங்கள். (குறுக்கீடு) இதற்கு பதில் சொல்லுங்கள்.

**பேரவைத் தலைவர்:** எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள். நாம் முடித்துவிடலாம்.

**எடப்பாடி பழனிசாமி:** பேரவைத் தலைவர் அவர்களே, இப்போது மத்திய அரசை நீங்கள் கேட்கிறீர்கள். நீங்கள் வாஜ்பாய் Governmentல் இருந்தீர்கள், ஏன் கேட்கவில்லை என்று நான் கேட்கிறேன். (குறுக்கீடு) பேரவைத் தலைவர் அவர்களே வாய்ப்பு கிடைக்கும்போதெல்லாம் பயன்படுத்திக் கொள்ளவேண்டும். மத்தியில் ஆட்சி, அதிகாரத்தில் இருக்கும்போது நீங்கள், நழுவ விட்டுவிட்டீர்கள். அப்போது நழுவ விட்டுவிட்டு, இப்போது வந்து, மற்றவர்களை குறைச் சொல்லி, நீங்கள் தப்பிக்கப் பார்க்கக்கூடாது.

**அவை முன்னவர் துரைமுருகன் :** இந்தப் பிரச்சினை நியாயமாக பார்த்தால், முதலமைச்சர் அவர்கள் கொடுத்த, அந்தத் தீர்மானத்தின்மீது மட்டும் ஓர் ஆதரவு தெரிவித்து பேசியிருக்கவேண்டும். ஆனால், எல்லோரும் ஆதியோடு, அந்தமாக பேசிக் கொண்டிருக்கிறீர்கள். நான் இதற்கு முன்னாலே இந்தப் பிரச்சினையில் நாங்களும், காங்கிரசும் பலமாக வேறுபட்டிருக்கிறோம். இந்தப் பிரச்சினையில் நீங்களும், நாங்களும் வேறுபட்டிருக்கிறோம். அந்த வேறுபாடுகளை பேசினால் இந்தப் பிரச்சினைக்கு தீர்வு வராது. அதைத்தான் முதலமைச்சர் அவர்கள் சொன்னார், இதை எல்லோரும் பெருந்தன்மையாக ஆதரித்துக் கொடுங்கள் என்று சொன்னார். இதிலே நம்முடைய உறுப்பினர் திருமதி வானதி சீனிவாசன் அவர்கள் கூட, ஆதரித்திருக்கிறார், அவருக்கு நன்றி. எனவே, பழையதை எடுத்து பேசினால் இரு பக்கமும் சரியாக இருக்காது. எனவே, எதிர்க்கட்சித் தலைவர் அவர்களிடம் நான் கேட்டுக்கொள்கிறேன், விடுங்கள், முடியுங்கள் பேச்சை. (எடப்பாடி பழனிசாமி குறுக்கீடு)

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** நீங்கள் ஆட்சியில் இருந்தபோது ஒன்றிய அரசுடன் பேசவில்லையென்று யாரும் சொல்லவில்லை. நானும் பலமுறை டெல்லிக்குச் சென்றபோது, பிரதமரிடத்தில் இதுகுறித்து வலியுறுத்திவிட்டு வந்திருக்கிறேன்; மனுவாகவும் கொடுத்து இருக்கிறேன். Petition கொடுத்திருக்கிறேன்; கோரிக்கை மனுக்களை உரிய ஆதாரங்களுடன் கொடுத்து விட்டு வந்திருக்கிறேன். இதைவிட வேறு என்ன செய்யமுடியும்? 54 கடிதங்களை அனுப்பியிருக்கிறேன், ஒன்றிய வெளியுறவுத் துறை அமைச்சர் ஜெயசங்கர் அவர்களைச் சந்திக்கும்போது, இந்தப் பிரச்சினையைப் பற்றிச் சொல்லிவிட்டு வந்திருக்கிறேன். அதுபோல், நீங்கள் பேசவில்லை என்று நான் சொல்லவில்லை. அந்த முயற்சியில் நீங்கள் ஈடுபடவில்லையென்று சொல்லவில்லை. இந்தப் பிரச்சினையில் அம்மையார் அவர்கள் நீதிமன்றத்திற்குச் சென்றது குறித்து நானே பேசினேன். நான் பேசும்போதும் அதுகுறித்துச் சொன்னேன். அதில் என்ன தவறு இருக்கிறது?

இந்தத் தீர்மானத்தை ஒட்டித்தான் பேச வேண்டும். நான் கொண்டு வந்திருக்கும் தீர்மானத்தின் அடிப்படையில்தான் நீங்கள் பேச அனுமதித்திருக்கிறீர்கள். அதை ஒட்டித்தான் பேச வேண்டும். இதில் இருக்கும் அரசியல் விவரங்களையெல்லாம் பேசி, இதை அரசியலாக்கி, பிரச்சினையாக்க வேண்டுமென்றால், அதற்கு நீங்கள் அனுமதிக்கிறீர்களா என்பதுதான் என்னுடைய கேள்வி?

**அமைச்சர் எ.வ. வேலு:** இந்தத் தீர்மானம் ஒட்டுமொத்தமாக தமிழர்களுடைய உணர்வுகளை வெளிப்படுத்த வேண்டும் என்பதன் அடிப்படையில்தான், முதலமைச்சர் அவர்கள் இதில் எந்தவித பிரச்சினையும் இல்லாமல் ஒருசேர இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று திரும்பத் திரும்ப சொல்லிக் கொண்டிருக்கிறார். பதினாறு ஆண்டு காலம் நீங்கள் அமைச்சரவையில் இருந்து என்ன செய்தீர்கள் என்று திரும்பத் திரும்பக் கேட்டுக்கொண்டிருக்கிறார். தம்பிதுரை ஏற்கெனவே நாடாளு மன்றத்திலே, சட்டத்தை இயற்றுகின்ற இடத்திலே, துணை சபாநாயகராக இருந்திருக்கிறார். ஏற்கெனவே அவர் ஒன்றிய அரசில் அமைச்சராக இருந்திருக்கி றார். கடம்பூர் ஜனார்த்தனன் அமைச்சராக இருந்திருக்கிறார். இவ்வாறு அனைத்திந்திய அண்ணா திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்தவர்கள் பலர் அமைச்சராக இருந்திருக்கிறார்கள். அவர்கள் மட்டும் உடனடியாக சட்டத்தை நிறைவேற்றி நம்மிடத்தில் ஒப்படைத்துவிட்டார்களா? அதுதான் வேண்டாம் என்று முதலமைச்சர் அவர்கள் சொல்லுகிறார். இதைப் பற்றி ஒருவருக்கொருவர் லாலி பாட வேண்டாம். ஒரே உணர்வாக இந்தத் தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டுமென்று கேட்கிறார். அதனால், எதிர்க்கட்சித் தலைவர் அவர்கள், அதை consider செய்யுங்கள். மீண்டும், மீண்டும் நீங்கள் இருந்தீர்கள், நாங்கள் இருந்தோம் என்று லாலி பாடிக் கொண்டிருந்தால் பிரச்சினை வேறு விதமாகப் போகும்.

**அமைச்சர் எஸ்.ரகுபதி:** எதிர்க்கட்சி தலைவர் அவர்களும் நீதிமன்றத்திற்கு சென்றதை சொன்னார். தலைவர் கலைஞர் அவர்களும் முதலமைச்சராக இருந்தபோது நீதிமன்ற த்திற்கு சென்று Interrogatory Application போட்டு அதிலே சேர்ந்திருந்தார் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

**முதல்வர் மு.க.ஸ்டாலின்:** பேரவைத் தலைவர் அவர்களே, மீண்டும், மீண்டும் தவறான தகவலை அவர் பதிவு செய்கிறார். அதனால், நான் உங்களை அன்போடு, பணிவோடு கேட்டுக்கொள்கிறேன். தீர்மானத்தை நிறைவேற்றித் தருவதற்கான வழிவகையை நீங்கள் காண வேண்டும். இல்லையென்றால் எதிர்ப்பு தெரிவித்துவிட்டுப் போகட்டும்; வேண்டாம் என்று சொல்லவில்லை. அது அவர்களுடைய உரிமை. (மேசையைத் தட்டும் ஒலி)

இவ்வாறு முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள் குறிப்பிட்டார்.